1984 மார்ச் 7]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே அரசு படிப்படியாக பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்கும் கொள்கையை வைத்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் புதிதாக கொடுக்கக் கூடிய பஸ் ரூட்டுகளை தனியாருக்குக் கொடுக்காமல், அரசே எடுத்துக் கொண்டு நடத்த முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அதைத்தான் சொன்னேன். இப்போது நாம் கொண்டு வருகின்ற இந்த பில்லிலே, அதைப் பற்றி விரிவாக நாம் அலசி, ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவோம். உங்களை எல்லாம் கேட்காமல் ஒரு முடிவு எடுக்காமல் விடக் கூடாது என்றுதான், இன்னும் ஒரு மணி நேரத்தில், கேள்வி நேரம் முடிந்தவுடன் நாம் இதைப் பற்றி விரிவாக அலசி ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக்கழகம் மூலம் இயக்கப்படும் தொடர் பேருந்துகள்.

126—(*வினா எண் 20452)—திரு. கி. கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் மூலம் அறிமுகப் படுத்தி இருக்கும் புதுமையான தொடர் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இப்போது இயக்கப்படும் தொடர் வண்டி சோதனை முறையில இயக்கப்படுகிறது. இதைப் போன்ற வண்டிகளை அதிகரிப்பது பற்றி இவ்வண்டியின் திறமையான இயக்கத்தையும் ஏற்படும் இலாபத்தையும் பார்த்து முடிவு எடுக்கப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)